**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure/ BNSS)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| Case No | : CC No. 421/2026 | Date | : 28.07.2026 |
| Deposition of Witness for | : அ.சா. 1 | Taluk | : |
| Name | : கோபிநாத் | Calling | : |
| Father Name | : சுப்பிரமணி | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 28.07.2026

(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர். )..

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

1. நான் தற்போது லட்சுமி நகரில் குடியிருந்து டிரைவிங் கார்ஸ் டெக்கர்ஸ் என்ற ஷோரூம் வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 20.09.2025 ஆம் தேதி காலை வழக்கம் போல் கார் டெக்கர்ஸ் கடையை திறந்து வேலை செய்துவிட்டு அன்று வியாபாரம் செய்த பணம் எவ்வளவு ரூ.54,500/—ஐ கல்லாப்பெட்டியில் வைத்துவிட்டு இரவு 10.00 மணியளவில் கார் டெக்கர்ஸ் கடையின் ஷட்டரை பூட்டி விட்டு வீட்டிற்கு சென்று விட்டேன்.

2. பின்பு மறுநாள் 21.09.2025 ஆம் தேதி நேரம் சரியாக தெரியவில்லை 10.00க்கு மேல் தான் கடைக்கு சென்று பார்த்தபோது எனது கடைசி சட்டர் பூட்டு உடைக்கப்பட்டு இருந்தது. நான் உடனே உள்ளே சென்று கடையின் கல்லாப்பெட்டியை பார்த்தபோது திறந்த நிலையில் இருந்தது. அதில் இருந்த ரூ.54,500/—ம் பணம் திருடு போயிருந்தது. பின்பு இது சம்பந்தமாக அக்கம் பக்கத்தில்இருந்தவர்களிடம் விசாரித்தேன். பின்பு என்னுடைய கடையில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கேமராவை பரிசோதித்து பார்த்தேன். அப்போது

S R BABU Digitally signed by S R BABU Date: 2026.07.28 17:00:47 +0530

எனது கடையின் பூட்டை ஒரு நபர் உடைத்து கல்லாவில் இருந்த பணத்தை திருடிச் சென்றுள்ளது பதிவாகி இருந்தது.

3. பின்னர் அன்றைய தினமே அந்த இடத்தில் உள்ள சில இடங்களில் இது சம்பந்தமாக நான் விசாரித்து யார் அந்த நபர் என்று தேடிக் கொண்டிருந்ததால் மறுநாள் 22.09.2025ம் தேதி சென்று புகார் அளித்தேன். பின்பு PEN DRIVEல் பதிவு செய்யப்பட்டிருந்த காட்சிகளுடன் அந்த PEN DRIVEவையும் காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன். தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(புகார் அ.த.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

4. பின்பு 15.12.2025 ஆம் தேதி காவல் நிலையத்திலிருந்து என்னை தொடர்பு கொண்டு கடையில் பணத்தை திருடிய நபரை கைது செய்து சித்தோடு காவல் நிலையத்திற்கு அழைத்து வந்திருப்பதாக கூறினார்கள். அதன் பேரில் நான் அன்றைய தினம் மாலை சித்தோடு காவல் நிலையம் சென்றேன் அப்போது சித்தோடு காவல் நிலையத்தில் பாதுகாப்பிலிருந்த நபரை என்னிடம் அடையாளம் காட்டி காளியப்பன் இவர்தான் அன்று என் கடையின் பூட்டை உடைத்து என்னுடைய கடையின் கல்லாப்பெட்டியில் இருந்த ரூ.54,500/-யை திருடிய நபர் என்று சொன்னார். அப்பொழுது எதிரியும் அதை நான் தான் எடுத்தேன் என்று ஒப்புக்கொண்டார்.

5. பின்பு அந்த PEN DRIVEஐ என்னிடம் இருந்து போலீசார் கைப்பற்றினர். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் PEN DRIVE நான் கொடுத்தது தான் அதை போலீசார் படிவம் 91ல் கைப்பற்றி என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். தற்போதைய என்னிடம் காட்டப்படும் படிவம் 91 உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **(படிவம் 91ல் உள்ள சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ. 2 ஆகவும், PEN DRIVE அ.த.சா.பொ. 1 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** தற்போது நீதிமன்றத்தில் உள்ள ஆஜர் எதிரி தான் 15.12.2026 ஆம் தேதி நான் காவல்நிலையத்தில் வைத்து பார்த்த நபர் ஆகும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

S R BABU
Digitally signed by S R BABU
Date: 2026.07.28 17:00:54 +0530

**குறுக்கு விசாரணை**

1. கடை இருக்கும் பகுதியானது போக்குவரத்து வாகனங்கள் அதிகம் செல்லும் பகுதி என்றால் சரிதான். நான் குடியிருக்கும் இடத்திற்கும் எனது கடைக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 02 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். புகார் கொடுத்த அன்றே பென் டிரைவை கொடுத்து விட்டேனா என்றால் கொடுத்து விட்டேன். உடைந்த பூட்டுகளை போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. 21.09.2025 ஆம் தேதி இரவு திருடு போனதாக போலீசார் என்னை விசாரித்த போது சொன்னேனா என்றால் இல்லை. எனது கடையில் உள்ள சிசிடிவி கேமராவை பார்த்தேன் என்பதையும் அதில் ஒரு நபர் கடையை உடைத்து திருடியுள்ளது பதிவாகியுள்ளது என்பதையும் எனது புகாரில் கூறியுள்ளேனா என்றால் புகாரில் சொல்லவில்லை.

2. கைரேகை நிபுணர்கள் கடைக்கு வந்தார்களா என்றால் புகார் கொடுத்த அன்றே வந்தார்கள். கடையிலிருந்து கைரேகை பதிவுகள் எடுக்கப்பட்டதா என்றால் எடுக்கப்பட்டது. போலீசார் எனக்கு எதிரியை அடையாளம் காண்பித்தார்கள் என்பதும் நான் எதிரியை காவல் நிலையத்தில் வைத்து பார்த்தேன் என்று கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. எனது கடையில் நான் பணம் வைத்திருந்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. எனது கடை உடைக்கப்படவும் இல்லை கடையிலிருந்து எந்த பொருளும் திருடு போகவும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.07.28 17:01:01 +0530

Judicial Magistrate No.III,

Erode.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure/ BNSS)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| Case No | : CC No. 421/2026 | Date | : 28.07.2026 |
| Deposition of Witness for | : அ.சா. 2 | Taluk | : |
| Name | : சுரேஷ்பாபு | Calling | : |
| Father Name | : கந்தசாமி | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 28.07.2026

(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர். )..

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

நான் தற்போது லட்சுமி நகரில் குடியிருந்து ஷேர் மார்க்கெட்டில் வேலை செய்து வருகிறேன். கடந்த 22/09/2025 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு மேல் சொந்த வேலையாக பவிஸ் பார்க் வந்துவிட்டு அதற்கு அருகே உள்ள டிரைவிங் கார் டெக்கர்ஸ் என்ற கார் டயர் ஷோரூம் வழியாக வந்தேன் அப்போது கார் டிரைவிங் கார் டெக்கர்ஸ் ஷோரூம் முன்பு போலீசார் படம் வரைந்து கொண்டிருந்தனர். அப்போது என்னையும் என்னுடன் இருந்த உதயகுமார் என்பவரையும் சாட்சிகளாக இருக்க கேட்டுக் கொண்டதன் பேரில் நாங்கள் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம். தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான் இரண்டாவது சாட்சி கையொப்பம் உதயகுமார் என்பவருடையதாகும். **(பார்வை மகஜரில் அ.த.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.07.28 17:01:07 +0530

**குறுக்கு விசாரணை**

நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது போலீசார் கேட்டுக் கொண்டதற்காக சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.07.28 17:01:13 +0530

Judicial Magistrate No.III,

Erode.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure/ BNSS)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | CC No. 421/2026 | Date | : | 28.07.2026 |
| Deposition of Witness for | : | அ.சா. 3 | Taluk | : | |
| Name | : | பாலமுருகன் | Calling | : | |
| Father Name | : | மாரப்பன் | Religion | : | |
| Village | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 28.07.2026

(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர். )..

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

1. நான் தற்போது கந்தம்பாளையம் கல்பாவி இடத்தில் குடியிருந்து லட்சுமி நகரில் அண்ணாமலையார் டிரேடர்ஸ் என்ற பெயரில் கட்டிட கட்டுமான பொருட்கள் வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். எனது கடைக்கு இரண்டு கடை தள்ளிதான் டிரைவ் இன் கார் டெக்கர்ஸ் கடை இருக்கிறது. அந்த கடையில் 20.09.2025 ஆம் தேதி இரவு 10.00 மணிக்கு மேல்ஷெட்டரின் பூட்டை உடைத்து கல்லாவில் வைத்திருந்த ரூ.54,500/-ஐ திருடு போனது சம்பந்தமாக அந்த கடையின் உரிமையாளர் கோபிநாத் எனக்கு 21/09/2025 ஆம் தேதி பகல் 12.00 மணிக்கு இதைப்பற்றி எனக்கு தகவல் சொன்னார். அப்போது நான் கோபிநாத்தின் டிரைவ் இன் கார் டெக்கர்ஸ் கடைக்குள் சென்று அங்கிருந்த சிசிடிவி கேமரா காட்சியை பார்த்தேன் அதில் ஒரு நபர் கடையின் ஷட்டரை உடைத்து உள்ளே வந்து கல்லாப்பெட்டியில் உள்ள பணத்தை எடுப்பதை பார்த்தேன். இது சம்பந்தமாக காவல் நிலையத்திலிருந்து வந்து இரண்டு மூன்று தடவை என்னை விசாரணை செய்தனர்.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.07.28 17:01:19 +0530

2. பின்பு 14.12.2025 ஆம் தேதி சித்தோடு காவல் நிலையத்திலிருந்து எனக்கு போன் மூலம் அன்று டிரைவ் இன் கார் டெக்கர்ஸ் கடையில் திருடிய நபரை காவல்நிலையத்தில் வைத்திருப்பதாகவும், ஸ்டேஷனுக்கு வந்து சிசிடிவி பார்த்த நபர் இவர் தானா என்று அடையாளம் காண்பிக்கும்படி என்னை ஸ்டேஷனுக்கு வர சொன்னார்கள். 15.12.2025 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு மேல் சித்தோடு காவல் நிலையம் சென்றேன் அப்போது அங்கு இன்னொரு நபரும் இருந்தார் அவருடைய பெயர் மணிகண்டன் என்று அறிந்தேன்.

3. பின்னர் சிசிடிவி கேமராவில் நான் பார்த்த நபர் தான் ஸ்டேஷனில் இருக்கும் நபர் என்று அடையாளம் காட்டினேன். பின்பு எதிரி தான் 20.09.2025 ஆம் தேதி அன்று இரவு 10.00 மணிக்கு மேல் டிரைவ் இன் கார் டெக்கர்ஸ் கடையில் பூட்டை உடைத்து திருடியதாக ஒப்புக்கொண்டார் அதனை நானும் என்னுடன் இருந்த மணிகண்டனும் பார்த்தோம் அதை போலீசார் பதிவு செய்தனர். பின்பு எங்களிடம் கையொப்பம் கேட்டனர் அதை படித்து பார்த்துவிட்டு நாங்கள் கையொப்பம் செய்தோம். தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான் முதலாவது சாட்சி கையொப்பம் மணிகண்டன் என்பவருடையது. **(ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. இது பற்றி போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

புகார் கொடுப்பதற்கு நானும் உடன் சென்றேனா என்றால் இல்லை. என் முன்னிலையில் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல. நானும் மணிகண்டனும் காவல் நிலையத்தில் வைத்து வெற்று தாளில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

S R BABU
Digitally signed by S R BABU
Date: 2026.07.28 17:01:26 +0530

சரியல்ல . நான் சிசிடிவி பதிவை பார்த்தேன் என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல.

புகார்தாரருக்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.07.28 17:01:34 +0530

Judicial Magistrate No.III,

Erode.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure/ BNSS)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| Case No | : CC No. 421/2026 | Date | : 28.07.2026 |
| Deposition of Witness for | : அ.சா. 4 | Taluk | : |
| Name | : பன்னீர்செல்வம் | Calling | : |
| Father Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 28.07.2026

(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர். )..

**அரசு தரப்பு முதல் விசாரணை:**

1. நான் தற்போது கருங்கல்பாளையம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் சித்தோடு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது கடந்த 22.09.2025ம் தேதி 10.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் ஹரிதாஸ் என்பவர் நிலையை அலுவலில் இருந்தபோது கோபிநாத் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று நிலைய குற்ற எண் 451/2025 சட்டப்பிரிவு 331(4), 305(a) BNS ன் கீழ் வழக்கு பதிவு செய்து வாதியின் புகாருடன் முதல் தகவல் அறிக்கையின் அசலையும் நீதித்துறை நடுவர் எண்.3 அவர்களுக்கு அனுப்பி வைத்து ஒரு நகலை புலன்விசாரணைக்காக என்னிடம் ஒப்புவித்தார். **(முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ. 5 குறியீடு செய்யப்படுகிறது)**

2. பின்பு அன்றைய தினமே இவ்வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 11.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் சுரேஷ் பாபு மற்றும் உதயகுமார் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர்

S R BABU Digitally signed by S R BABU Date: 2026.07.28 17:01:44 +0530

மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து பார்வை மகஜரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். **(மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. பின்பு சாட்சிகள் கோபிநாத், கோவிந்தராஜ், லட்சுமணன், சுரேஷ், பாபு, மணிகண்டன், பாலமுருகன் மற்றும் ஹரிதாஸ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் சம்பவ இட விசாரணையில் இருந்தும் சாட்சிகளின் வாக்குமூலத்திலிருந்தும் சம்பவம் உண்மை என தெரிந்து புலன் விசாரணை மேற்கொண்டதில் கடந்த 17.11.2025-ம் தேதி சேலம் மாவட்டம் சூரமங்கலம் காவல் நிலைய குற்ற எண் 532/2025 சட்டப்பிரிவுகள் 331(4), 305(a) வழக்கில் கைது செய்யப்பட்ட எதிரி காளியப்பன், த/பெ.நயினார் என்பவர் மேற்படி வழக்கத்திற்காக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சித்தோடு காவல் நிலைய குற்ற எண் 451/2025 வழக்கின் குற்ற சம்பவத்திலும் ஈடுபட்டதாக தெரிவித்ததன் அடிப்படையில் பவானி உட்கோட்ட துணைக் காவலர் கண்காணிப்பாளர்களின் உத்தரவின் பேரில் சேலம் மத்திய சிறையில் இருந்து வந்த எதிரி காளியப்பன் என்பவரை 24.11.2025 தேதி காலை 11:30 மணிக்கு சேலம் மத்திய சிறையில் வைத்து சிறை கண்காணிப்பாளர்கள் அவர்கள் முன்னிலையில் சம்பிரதாய கைது செய்து பின்னர் கனம் நீதித்துறை நடுவர் எண். 3 ஈரோடு அவர்களது முன்பு 15.12.2025 ஆம் தேதி பிடி வாரண்டியில் ஆஜர் செய்து ஒரு நாள் போலீஸ் காவல் பெறப்பட்டது.

4. பின்பு மணிகண்டன் மற்றும் பாலமுருகன் ஆகியோர் முன்னிலையில் 15.12.2025 ஆம் தேதி பிற்பகல் 15.30 மணி முதல் 16.30 மணி வரை எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்று பின்பு வாதி காவல் நிலையத்தில் ஒப்படைத்த சம்பவ இடத்தில் பதிவாகி இருந்த சிசிடிவி கேமரா காட்சி அடங்கிய Pendriveஐ பெற்று படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **(படிவம் 91 அ.த.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்பு ஒரு நாள் போலீஸ் காவல் முடித்து அன்றைய தினமே நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார். பின்பு எனது புலன் விசாரணை முடித்து உதவி ஆய்வாளர் பாஸ்கர் என்பவரிடம் ஒப்புவித்தேன். அவர் அவரது

S R BABU
Digitally signed by S R BABU
Date: 2026.07.28 17:01:51 +0530

புலன்விசாரணையை முடித்து எதிரி மீது 331(4), 305(a) இதச பிரிவின் கீழ் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தார்.

**குறுக்கு விசாரணை**

1. முதல் தகவல் அறிக்கையில் காலம் மூன்றில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் கொடுக்கும் போது பென்டிரைவ் கொடுத்ததாக புகார் கூறியுள்ளார் என்றால் சரியல்ல. கடந்த 15.12.2025 ஆம் தேதி மேற்படி Pendriveஐ படிவம் 91 மூலம் கைப்பற்றியதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. கைரேகை நிபுணர்கள் மூலம் சம்பவ இடத்தில் இருந்து கைரேகை பதிவுகள் கைப்பற்றப்பட்டது என்றால் பதிவுகள் கிடைக்கவில்லை. சிசிடிவி கேமராவில் இருந்து முறையாக பதிவுகளை பென்டிரைவுக்கு மாற்றவில்லை என்பதால் தான் 65B–Certificate தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. உடைந்த பூட்டுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அவ்வாறு எதுவும் சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றப்படவில்லை. இந்த வழக்கின் உண்மையான குற்றவாளியை பிடிக்க முடியவில்லை என்பதால் ஏற்கனவே வேறொரு வழக்கில் சிறையில் இருந்த எதிரி மீது இந்த பொய்யான இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.07.28 17:01:59 +0530

Judicial Magistrate No.III,

Erode.